திருகோணமலை நகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருகோணமலை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 10 (1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபையின் விடுதியில் அத்து மீறி குடியிருப்பவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டிருந்தும், நிதி நிலமைக் கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பு ஒதுக்கம் எதுவும் மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருக்கவில்லை.	நிகழாண்டு இறுதிக் கணக்கில் இவ் விரு வழக்கு தொடர்பாக நிகழத்தக்க பொறுப்புகளுக்கு சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நிகழத்தக்க பொறுப்புக்களிற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	கிழக்கு மாகாணத்திற்கான உள்ளுராட்சி நிறுவனங்களிற்கு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 64,927,707 பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	இச்சபையானது நிகழாண்டில் மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட இருப்பதனால் மாநகர சபை நடைமுறைக்கமைய பெறுமானத் தேய்வு இறுதிக்கணக்கில் மேற்கொள்ளப்படும்.	இதுவரை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளை பின்பற்றி கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
கூட்டுப் பெறுமதி ரூபா 60,583,861 தொகையான திரண்டநிதி மற்றும் 06 நிலையான சொத்துக்களின் கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகளைப் பெற்றுக் கொள்ள சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய தகவல்கள் பெறப்பட்டு வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களுக்கான சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளை பேணவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரை	சிபார்சு
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1), (2),(3)	ஒப்பந்ததாரருக்கு மீளளிக்கப்பட வேண்டியிருந்த பிடிபணம் ரூபா 99,127,351 தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	வைப்பு பதிவேட்டிலுள்ள பிடிபணங்கள் தொடர்பாக சரியான முறையில் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	காலங்கடந்த வைப்புக்களை இனங்கண்டு அவற்றை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 25,716,258 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 59,152,235 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா	பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா	சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா	பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா	சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா
(i)	வீதவரியும் வரியும்	42,950,000	141,889,982	43,704,548	98,185,435	39,105,000	143,594,750	45,418,121	98,176,629
(ii)	வாடகை	37,600,000	99,049,486	29,314,884	69,734,602	32,320,000	83,764,504	29,818,993	53,945,511
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	24,352,000	29,277,358	22,736,968	6,540,391	18,783,460	23,504,203	22,736,968	767,235
(iv)	ஏனைய வருமானம்	42,640,000	161,949,964	91,633,082	70,316,882	17,423,000	172,415,963	92,113,921	80,302,042
	கூட்டுத்தொகை	147,542,000	432,166,791	187,389,482	244,777,309	107,631,460	423,279,420	190,088,003	233,191,417

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ) வீதவரியும் வரியும்		
நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படுகின்ற ஆதனங்கள் தொடர்பில் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 95,964,004 ஆதனவரி நிலுவை அறவீடு செய்வதற்கு சபையினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	மொத்த ஆதனவரி நிலுவையில் 2024 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னனைய ஆண்டுக்கான 6,420,221 ரூபா 2025 ஆம் ஆண்டு இதுவரை அறவிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆதனவரி செலுத்தாதவர்களிடமிருந்து நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	ஆதனவரி நிலுவைகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) வாடகை

1) கடை வாடகை

நகரசபைக்கு சொந்தமான 328 வர்த்தக நிலையங்களுக்குரிய வாடகை நிலுவை ரூபா 56,032,168 தொகையினை கடந்த 13 வருடங்களாக அறவிடுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நகரசபை கடை வாடகை நிலுவையில் 2024ம் ஆண்டு மற்றும் 2025ம் ஆண்டு ரூபா 1,447,568 அறவிடப்பட்டுள்ளது. மேலும் நீண்டகால நிலுவையில் உள்ள குத்தகைதாரர்களிடம் நிலுவை அறவிட விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.	கடை வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ii) அரச உத்தியோகத்தர் விடுதி வாடகை

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அரச விடுதிகள் மீதான வாடகை நிலுவைகள் தொடர்பில் 43 விடுதிகளை பயன்படுத்திய உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டிய வாடகை கூட்டு மொத்தம் ரூபா 1,102,906 கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகக் காணப்படுகின்ற போதிலும் அறவிடுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அரச விடுதி வாடகை 10 வருடங்களுக்கு மேலாக காணப்படுவதால் அவற்றை அறவிட விசேட கவனம் எடுக்கப்பட்டு வருவதுடன் அறவிட முடியாத பட்சத்தில் அதனை விட்டுவிடுதலுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	வாடகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபை சட்டத்தின் 4 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	நகரசபைக்குச் சொந்தமான காப்புறுதி செய்யப்படாத ஒரு Pickup வாகனம் 2023 சனவரி 12 ஆம் திகதி விபத்துக்குள்ளான போதிலும் குறித்த விபத்து தொடர்பான பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காமையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த விபத்து தொடர்பில் பொலிஸாருக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளது. முழுமையான விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய நடவடிக்கை எடுத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஆ)	நகராட்சி மன்றத்திற்குட்பட்ட இந்து மயானத்தில் தகனக் கிரிகைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற இதுவரை பெறுமதி இனங்காணப்படாதுள்ள 06 எரிவாயுக்கள் (Gas slinder) மற்றும் வாகன இயந்திரம் போன்ற சொத்துக்கள் மீளாய்வாண்டு காலப்பகுதியில் களவாடப்பட்டிருந்த போதிலும் இன்று வரை விசாரணை நிலுவையிலேயே உள்ளதும் அவதானிக்கப்பட்டுள்ளது.	Gas Cylinder களவு தொடர்பாக முழுமையான விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதும் குறித்த இழப்புக்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும்.	நட்டம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டு காலப்பகுதிக்கான நகர சபையினால் எரிபொருள் செலவீனமாக ரூபா 31,969,002 செலவு செய்யப்பட்ட நிலையில் சபையினால் பயன் படுத்தப்படுகின்ற 40 வாகனங்களுக்கான நாளாந்த சம்பவப் பதிவு ஓட்டக்குறிப்பு சபையினால் நடைமுறைப் படுத்தப்படாமையுடன் எரிபொருள் நுகர்வு பரிசோதனை என்பன மேற்கொள்ளப் பட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக் காமையினால் எரிபொருள் செலவீனத்தின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்த முடியாமையுடன் வாகனப் பயன்பாடு தொடர்பில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு பின்பற்றப்பட்டிருக்கவில்லை.	தற்போது பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை 13 வாகனங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மற்றும் நாளாந்த ஓட்டக்குறிப்பும் இற்றைப் படுத்தப்பட்டு வருகிறது.	பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு எரிபொருட் பரிசோதனை மற்றும் நாளாந்த ஓட்டக்குறிப்பு இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	வைத்தியசாலை கழிவுகளை எரியூட்டுவதற்காக பொருத்தப்பட்ட ரூபா 5,695,830 ஆன இயந்திரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பயன் படுத்தப்படாது காணப்படுகின்றது. தற்போது இவ் இயந்திரம் முழுமையான துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றது.	வைத்தியசாலை கழிவு எரியூட்டும் இயந்திரமானது பொருளாதார ரீதியில் வினைத்திறன் அற்றதாகையால் அதனை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	இயந்திரம் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மத்திய சந்தைக் கட்டட கடைத் தொகுதியிலுள்ள 48 கடைகள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பயன்பாடற்றுக் காணப்படுகிறதுடன் குறித்த கடைத் தொகுதியினை வாடகைக்கு வழங்குவதற்கு அல்லது வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் அவ் கடைகளை வேறு சந்தை அல்லாத கடைகளாக குத்தகைக்கு கொடுப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	கடைத்தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
சபையில் செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகள் 07 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அவற்றிற்கு உரிய இலங்கை நிர்வாக சேவை மற்றும் இலங்கை கணக்காளர் சேவையில் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டிருக்க வில்லை.	85 மூன்றாம் நிலை மட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
நான்கு அபிவிருத்தி இலக்குகளை இனங்காணப்பட்டிருந்ததுடன், வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தி அடையக்கூடிய ஏனைய குறிக்கோள்களை இனங்கண்டு அவற்றினை பௌதீக ரீதியாக அடைந்து கொள்ளக் கூடியவாறு திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.	2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 ஆம்இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை தயாரிக்க கவனம் செலுத்தப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அபிவிருத்தி இலக்குகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.